museum of modern
and contemporary art
sri lanka

## Quarterly Newsletter #13 – March 2025

**‘சிலோனின் முப்பாடல்’**

நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகத்தின் (MMCA இலங்கை) **‘சிலோனின் முப்பாடல்’** எனும் தலைப்பிலான அண்மைய கண்காட்சியானது ஜனவரி 23 முதல் ஃபெப்ரவரி 11 வரை கொழும்பு 2, பாக் ஸ்ட்ரீற் மியூஸ், த ஸ்டேபிள்ஸில் நடைபெற்றது. வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு மாகாணங்களைச் சேர்ந்த ஒன்பது பாஅடசாலைகளிலிருந்தும் உயர் கல்வி நிறுவனங்களிலிருந்தும் வருகை தந்த 460 மாணவர்கள் உட்பட 2,015 பார்வையாளர்கள் இக் கண்காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கை தேயிலை பிரச்சார சபையால் உருவாக்கப்பட்ட ‘The Song of Ceylon’ (1934) எனும் திரைப்படத்தை ஆரம்பப் புள்ளியாகக் கொண்ட இக் கண்காட்சியை **தினால் சஜீவ** மற்றும் **நிமாயா ஹரிஸ்** ஆகியோரின் உதவியுடன் **சந்தேவ் ஹண்டி** எடுத்தண்டார். அத் திரைப்படம் வெளியாகித் தசாப்தங்கள் கடந்து பின்னர் இரண்டு கலைஞர்கள் அத் திரைப்படத்தை எவ்வாறு வெவ்வேறு இரு கண்ணோட்டங்களில் மீள அணுகி, அக் கண்ணோட்டத்திலிருந்து உள்வாங்கியதன் அடிப்படையில் மாற்று ‘பாடலை’ எப்படி உருவாக்கினர் என்பது இக் கண்காட்சியிலே ஆராயப்பட்டது. இலங்கையின் இந்த மூன்று பாடல்களையும் சமகாலக் கலைஞர்களின் அண்மைய அசையும் படப் படைப்புகளுடன் இணைத்து ஆய்ந்ததன் ஊடாக, அசையும் படங்கள் எனும் ஊடகத்தின் வழியே கதைகள் எவ்வாறு சொல்லப்பட்டு, மீள கூறப்பட்டு, தளம்பிரிக்கப்படுகின்றன என்பதை இக் கண்காட்சி ஆராய்கிறது.

‘சிலோனின் முப்பாடல்’ ல் பானி அபிடி (பி.1971), இமாத் மஜீத் (பி.1991) உடன் ஷாரிகா நவமணி (பி.1990), லலீன் ஜயமன்ன (பி.1947), லயனல் வெண்ட் (1900-1944) மற்றும் ஜோன் கிரியசன் (1897-1972), வோல்டர் லே (1905-1942), பசில் ரைட் (1907-1987), மார்க் லபோ (1952-2005), ரோசலிண்ட் நஷாஷிபி (பி.1973) ஆகிய கலைஞர்கள் இலங்கை, ஜேமனி, பாகிஸ்தான், அமெரிக்க ஐக்கிய நாடு, ஒஸ்திரேலியா மற்றும் ஐக்கிய ராச்சியம் போன்ற நாடுகளிலிருந்து இணைந்து கொண்டனர்.

**Countdown 1-Minute Film Night**

‘சிலோனின் முப்பாடல்’ நிகழ்வின் ஒரு பகுதியாக, பிப்ரவரி 7 ம் திகதி கொழும்பு **பெயாஃபூற் கலரியுடன்** இணைந்து, ‘**Countdown 1-Minute Film Night**’ நிகழ்ச்சியினை இரண்டாம்

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

முறை காட்சிப்படுத்தியதில் பெருமகிழ்ச்சி. காணொளிக் கலை மற்றும் அசையும் பிம்பம் போன்ற வடிவங்களில் முயன்று பார்க்கும் கலைஞர்களாலும் படைப்பாளிகளாலும் உருவாக்கப்பட்ட இந்த ஒரு நிமிடத் திரைப்படங்களின் திரையிடலானது விளையாட்டு, ஒழுக்கம் மற்றும் படைப்பாற்றல் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்கான களத்தினைக் குறும்பட உருவாக்கம் கொண்டுள்ள ஆற்றலைக் கொண்டாடியது. இத் திரைப்பட இரவில், 60-க்கும் மேற்பட்ட படைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 30 படைப்புகள் இடம்பெற்றன. போட்டியில் பங்கேற்ற அனைத்துப் படைப்பாளிகளுக்கும் எங்களது நல்வாழ்த்துக்கள்!

**உலக நினைவுச் சின்ன நிதியம் மற்றும் கட்டிடக்கலை வரலாற்றாசிரியர்கள் சங்கத்தின் வருகைகள்**

சர்வதேச நட்புகளுடனான எங்கள் தொடர்புகளை விரிவுபடுத்தும் வகையில், **உலக நினைவுச்சின்னங்கள் நிதியத்தின்** காப்பாளர்களும் **கட்டடக்கலை வரலாற்றாசிரியர்கள் சங்கத்தின்** உறுப்பினர்களும் 2025 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் MMCA இலங்கைக்கு வருகை தந்தனர். MMCA இலங்கை ஆவணக் காப்பகக் குழுவினர் பட்டியலிடுதல் மற்றும் எண்ணிமப்படுத்துதல் முயற்சிகளில் மாதமும் கண்ட முன்னேற்றங்கள் குறித்து அவர்களுடன் உரையாடும் வாய்ப்பை அவர்கள் பெற்றனர்.

**இலங்கையின் யாழ்ப்பாணத்தில் Pop Art and South Asia Conference**

2025 டிசம்பர் 16 ம் திகதி சிரேஷ்ட எடுத்தாளுநர் **சந்தேவ் ஹண்டி** மற்றும் திட்டக் காப்பாளர் **நிமாயா ஹரிஸ்** ஆகியோர் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற **Pop Art and South Asia Conference** (பொப் கலை மற்றும் தெற்காசிய மாநாட்டில்) உரையாற்றினர். இஃப்திகார் தாடி மற்றும் ரூபினா கரோட் ஆகியோரால் தொகுக்கப்பட்ட கண்காட்சியில் முன்வைக்கப்பட்ட ‘பொப் தெற்காசியா’ என்ற கருத்தை, இலங்கையின் சமகாலக் கலையில் ஏற்பட்டுள்ள அண்மைய முன்னேற்றங்களுடன் தொடர்புபடுத்தி, **‘On the Possibilities of Pop: Testing Frameworks from Sri Lanka’** (பொப்பின் சாத்தியக்கூறுகள்: இலங்கையிலிருந்து கட்டமைப்புகளைச் சோதித்தல்) என்ற தலைப்பில் அவர்களது ஆய்வுக் கட்டுரை ஆராய்ந்தது.

**Primer Southeast Asia**

எமது குழுவின் இந்த ஆண்டுக்கான கற்றல் முயற்சிகளை ஆரம்பிக்கும் வைக்கும் வகையில் ஜனவரி 25 முதல் 30 வரை நடைபெற்ற **Primer Southeast Asia** நிகழ்ச்சியில் எமது தலைமை எடுத்தாளுநர் **ஷாமினி பெரேரா** கலந்து கொண்டார். **சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தால்** ஏற்பாடு செய்யப்பட்ட, அழைப்பின் அடிப்படையில் மட்டும் நடைபெறும் இந் நிகழ்ச்சியானது தென்கிழக்கு ஆசியாவிற்கு வெளியே செயல்படும்

எடுத்தாளர்களுக்குத் தமது பிராந்தியத்தின் நவீன மற்றும் சமகால கலைச் சூழல்கள் குறித்த ஆழமான பார்வையை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசிய நகரங்களான ஜகாற்றா, பான்டங் ஆகிய இடங்களில் உள்ள கலைஞர்களின் கலைக்கூடங்கள், கண்காட்சிகள் மற்றும் அருங்காட்சியகங்களைப் பார்வையிடும் வாய்ப்பு பெரேராவுக்குக் கிடைத்தது. அங்கு அவர் கலைஞர்கள், எடுத்தாளுநர்கள் மற்றும் பிற கலை வல்லுநர்களுடன் ஆழமாகக் கலந்துரையாடினார்.

**சிங்கப்பூர் ஈர் வருட மாபெரும் கண்காட்சி 2025 - ‘Boxes, Borders, Biji, Cipta’**

**‘Singapore Biennale 2025: pure intention’** உடன் இணைந்து **சிங்கப்பூர் கலைக்கூடத்தில்** மார்ச் 22 அன்று நடைபெற்ற ‘பெட்டிகள், எல்லைகள், பீஜி, சிப்டா’ என்ற தலைப்பிலான அமர்வில் ஷாமினி பெரேராவும் உரையாற்றினார். CAMP நடாத்திய ‘Metabolic Container’ (2025) என்ற கலைப்படைப்பால் ஈர்க்கப்பட்ட பேச்சாளர்கள் பரந்த மலாய் தேசத்தைப் பரந்தளவில் ஆராய்ந்து பேசிய பேச்சாளர்கள், உணவைப் பொருள்சார் வரலாறாகக் கொண்டும் ‘எல்லையைக்’ கதைசொல்லும் கருவியாகவும் கொண்டு ஆராய்ந்தனர்.

**கொச்சி மாபெரும் கண்காட்சி அறக்கட்டளையின் கண்காட்சி-பயிலரங்கம்**

ஃபெப்ரவரி 9 முதல் 13 வரை, கேரளாவின் ஃபோற் கொச்சியில் உள்ள **கொச்சி மாபெரும் கண்காட்சி அறக்கட்டளை** நடத்திய **கண்காட்சி-பயிலரங்கம் எனும் ஆழ் எடுத்தாளுநர் பயிற்சியில்** (Exhibition–Workshop curatorial intensive) **நிமாயா ஹரிஸ்** பங்கேற்றார். இளம் கலைக் காட்சியாளர்கள் சமகால கலைக்காட்சி மூலம் விமர்சன உரையாடல்கள் மற்றும் வழிமுறைகளில் ஈடுபடுவதற்கான ஒரு கூட்டுத் தளமாக இந்த ஏழு நாள் நிகழ்ச்சி, அமைந்தது. South About Conference மாநாட்டிலும் ஆறு ஆழ் கலைக்காட்சியாளர் அமர்வுகளின் தொடரிலும் ஹரிஸ் கலந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து, கொச்சி-முசிரிஸ் மாபெரும் கண்காட்சியிலும் (Kochi Muziris Biennale) அவர் கலந்து கொண்டார்.

**ஆவணக் காப்பக கணணி மயமாக்கல் பயிற்சி**

ஆவணக் காப்பகம் தொடர்பான எமது குழுப் பயிற்சி முயற்சிகளைத் தொடரும் வகையில், **ஆவணக்காப்பாளர் நைஜல் நுகவெல**, ஒரு ஆவணக்காப்பகத்தில் உள்ள பல்வேறு வகையான பதிவுகளை கணணி மயமாக்குவது குறித்து MMCA இலங்கை ஆவணக் காப்பகம் மற்றும் சேகரிப்புக் குழுக்களுக்கு ஒரு அமர்வை நடத்தினார். பிப்ரவரி 16 ம் திகதி நடைபெற்ற இப் பயிற்சியில், கணணி மயமாக்கலின் நெறிமுறைகள், ஒரு கணணி மயமாக்கல் பணிப்பாய்வின் முக்கியக் கூறுகள், அதன் தொழில்நுட்ப மற்றும் நடைமுறைக் கூறுகள் என கணணி மயமாக்கலின் அனைத்து அம்சங்களும் அடங்கியிருந்தன.

**தெற்காசியக் கண்காட்சி எடுத்தாளல் பயிற்சி**

புது டெல்ஹி கோத்-நிறுவனம்/மேக்ஸ் முல்லர் பவனுடன் இணைந்து கோஜ் சர்வதேசக் கலைஞர்கள் சங்கம் நடாத்திய **தெற்காசியக் கண்காட்சி எடுத்தாளுநர் பயிற்சி (CISA)** திட்டத்தின் ஏழாவது முன்னெடுப்பில் வெற்றிகரமாகப் பயிற்சியை நிறைவு செய்த உதவிக் கண்காட்சி எடுத்தாளுநர் **தினால் சஜீவ**, மார்ச் 12 அன்று புது டெல்ஹி CISA ன் 'When We Return' கண்காட்சித் தொடரின் ஒரு பகுதியாக, **'as needed'** எனும் தலைப்பில் தனது முதலாவது தனிப்பட்ட கண்காட்சி எடுத்தாளல் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

**MMCA இலங்கையின் நிறுவுன காப்பாளர்கள் கொச்சி-முசிறிஸ் மாபெரும் கண்காட்சியில் (Kochi-Muziris Biennale) கலந்து கொண்டனர்**

கொச்சியில் நடைபெற்ற நிறுவுன காப்பாளர்களின் கலைத் தொகுப்புச் சுற்றுப் பயணம், ஃபெப்ரவரி 26 முதல் மார்ச் 1 வரை, கொச்சி-முசிறிஸ் மாபெரும் கண்காட்சியில் (Kochi-Muziris Biennale) வழிகாட்டப்பட்ட சுற்றுப் பயணங்களுடன் இணைவாக நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் பல கண்காட்சி அரங்குகள் மற்றும் மாணவர் வருகைகள் இடம்பெற்றன.

**'Building a Museum Without a Blueprint' by Desi Art Mag**

இறுதியாக, **Desi Art Mag** இன் அண்மைய இதழில் இலங்கை MMCA பற்றி இடம்பெற்றுள்ள ஆக்கத்தில், இலங்கையின் முதலாவது நவீன மற்றும் சமகாலக் கலை அருங்காட்சியகத்தை உருவாக்கினாலும் அதில் இருந்த சவாலான பணி குறித்து அதன் தலைமைக் காப்பாளர் ஷாமினி பெரேராவுடன் நம்ரதா திவான்ஜி உரையாடுகிறார். 'Building a Museum without a Blueprint' கட்டுரை, தேசி ஆட் மக் வலைப்பதிவில் தமிழ், சிங்களம் மற்றும் இந்தி மொழிகளிலும் கிடைக்கிறது.